முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (17.7.2025) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் தமிழ்நாட்டிலுள்ள 25 மாநகராட்சிகள் 144 நகராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் அடிப்படை பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், மாநகராட்சி ஆணையர்கள், துணை ஆணையர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திருமதி துர்கா ஸ்டாலினின்

# 'அவரும் நானும்' பாகம் - 2' நூல் வெளியீட்டு விழா!

## சுப்ரியா சுலே எம்.பி. வெளியிடுகிறார் ! முதல் நூலை எழுத்தாளர் சிவசங்கரி பெறுகிறார்!

**சென்னை, ஜூலை.18-**

**முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் துணைவியார் திருமதி. துர்கா ஸ்டாலின் அவர்களின் 'அவரும் நானும்' பாகம் - 2 நூல் வெளியீட்டு விழா உயிர்மை பதிப்பகம் சார்பில் நாளை (19-7-2025 - சனிக்கிழமை) மாலை 5.00 மணியளவில் சென்னை- கோட்டூர்புரம்- அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடை பெறுகிறது.**

இவ்விழாவில் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., வரவேற்புரையாற்றுகிறார்.

கவிஞர் மனுஷ்ய புத்திரன், பதிப்பாளர் உரையாற்றுகிறார்.

பத்திரிகையாளர் திருமதி. லோகநாயகி, நூல் அறிமுக உரையாற்று கிறார்.

இந்நூலை தேசியவாத காங்கிரஸ் கட்சியின் (எஸ்.பி.,) செயல் தலைவரும், அக்கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவருமான திருமதி. சுப்ரியா சுலே எம்.பி. வெளியிடுகிறார்.

முதல் நூலை எழுத்தாளர் திருமதி. சிவசங்கரி பெறுகிறார்.

இவ்விழாவில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய மேல் முறையீட்டு ஆணையத் தலைவரும் - மேனாள் நீதியரசருமான திருமதி பவானி சுப்பராயன், 'டாபே' குழுமம் நிர்வாக இயக்குனர் - தலைவர் திருமதி. மல்லிகா சீனிவாசன், கோவை சந்திரா - ஜி.ஆர்.ஜி. நிறுவனங்களின் தலைவர் முனைவர் நந்தினி ரங்கசாமி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

விழாவில் திருமதி. துர்கா ஸ்டாலின் அவர்கள் ஏற்புரையாற்றுகிறார்.

'உயிர்மை' இதழின் நிர்வாக ஆசிரியர் செல்வி ராமச்சந்திரன் நன்றி கூறுகிறார்.

இவ்விழாவில், மாலை 5 மணி முதல் மாலை 6 மணி வரை கலைமாமணி ராஜேஷ் வைத்யாவின் வீணை இசை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

### ஆடி மாதத்தில் அம்மன் திருக்கோயில்களுக்கு

# கட்டணமில்லா ஆன்மிகப் பயணம் இன்று தொடங்குகிறது

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைக்கிறார்

*சென்னை, ஜூலை 18 -*

*தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி, 2025 - 2026 ஆம் நிதியாண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பினை நிறை வேற்றிடும் வகையில், ஆடி மாதத்தில் தமிழ்நாட்டிலுள்ள புகழ்பெற்ற அம்மன் திருக்கோயில்களுக்கு 2,000 மூத்த குடிமக்களை கட்டணமின்றி அழைத்துச் செல்லும் வகையில் முதற் கட்ட ஆன்மிகப் பயணம் இன்று (18.07.2025) திருவொற்றியூர் வடிவுடையம்மன் திருக்கோயிலில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் தொடங்கி வைக்கிறார்.*

*2025 - 2026 ஆம் ஆண்டு சட்டமன்ற மானியக் கோரிக்கையில் "ஆடி மாதத்தில் பிரசித்தி பெற்ற அம்மன் திருக்கோயி ல்களுக்கு இவ்வாண்டு 2,000 பக்தர்கள் ஆன்மிகப் பயணம் அழைத்துச் செல்லப்படுவர்" என அறிவிக்கப்பட்டது. அதனை செயல்படுத்திடும் வகையில் இந்தாண்டு 60 முதல் 70 வயதிற்குட்பட்ட மூத்த குடிமக்கள் கட்டணமின்றி அரசு நிதியில் சென்னை, தஞ்சாவூர், மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களை தலைமையிடமாக கொண்டு 5 பயணத் திட்டங்களாக 2025 ஜூலை மாதம் 18, 25, ஆகஸ்ட் மாதம் 01, 08 மற்றும் 15 ஆகிய தேதிகளில் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.*

*ஆடி மாத அம்மன் திருக்கோயில்கள் ஆன்மிகப் பயணத்தினை சென்னையில் நாளை (18.07. 2025) காலை, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் திருவொற்றியூர், வடிவுடையம்மன் திருக்கோயிலில் கொடியசைத்து தொடங்கி வைக்கிறார். இக்குழுவினருக்கு திருவொற்றியூர் வடிவுடையம்மன், பாரிமுனை காளிகாம்பாள், மயிலாப்பூர் கற்பகாம்பாள், திருவேற்காடு தேவி கருமாரியம்மன் மற்றும் மாங்காடு காமாட்சி அம்மன் ஆகிய திருக்கோயில்களில் சிறப்பு தரிசனமும், மதிய உணவும் வழங்கப்படுகிறது.*

### பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில்

# 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்! இன்று 6 வார்டுகளில் நடைபெறுகிறது!

*சென்னை, ஜூலை 18 -*

*பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நாளை (18.07.2025) மணலி மண்டலம், வார்டு15ல் மணலி புது நகர், சென்னை தொடக்கப் பள்ளி, தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு34ல் ஆர்.வி.நகர், குரு மூர்த்தி பள்ளி, திரு.வி.க. நகர் மண்டலம், வார்டு64ல் சீனிவாசன் நகர் 3வது பிரதான சாலையில் உள்ள பழைய பள்ளிக் கட்டடம், தேனாம்பேட்டை மண்டலம், வார்டு110ல் மகாலிங்கபுரம் சாலை, சூசைபுரம், சர்ச் ஆஃப் செயின்ட் ஜோசப் தி ஒர்க்கர், வளசரவாக்கம் மண்டலம், வார்டு 144ல் மதுரவாயல், பி.எச். சாலை, ஸ்ரீபாக்யலஷ்மி திருமண மண்டபம், ஆலந்தூர் மண்டலம், வார்டு156ல் முகலிவாக்கம், வி.ஜி.எஸ். பிருந்தாவன் கார்டன் எக்ஸ்டென்சன், சமூக நலக் கூடம் ஆகிய 6 வார்டுகளில் நடைபெறவுள்ளது.*

*இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும். பொது மக்கள் தங்கள் வார்டுகளில் நடைபெறும் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.*

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலை பட்டறைக்காடு கிராமத்தில் உள்ள அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளியில் கட்டப்பட்டு வரும் கூடுதல் வகுப்பறை கட்டடங்களைப் பார்வையிட்டு, புதிதாக கட்டப்படவுள்ள மாணவர் விடுதி குறித்து கேட்டறிந்தார்.

திருவண்ணாமலை தூய்மை அருணை சார்பில், அருணை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்து, 50க்கும் மேற்பட்ட கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு நடத்தி, அவர்களுக்கு பரிசு பெட்டகங்களை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார். உடன் சட்டப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, அருணை கல்வி குழுமங்கள் துணைத் தலைவர் எ.வ.குமரன், டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை.எம்பி., மு.பெ.கிரி.எம்.எல்.ஏ., இரா.ஸ்ரீதரன், டாக்டர் குணசிங், ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், மேயர் நிர்மலாவேல்மாறன், துணை மேயர் சு.ராஜாங்கம் உட்பட பலர் உள்ளனர்.

### தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம் நடைபெறும் போது

# ஆதார் - ரேஷன் அட்டையை ஆவணமாகப் பெற வேண்டும்!

## தலைமைத் தேர்தல் ஆணையத்திடம் – கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மனு!

## புதுடெல்லியில் – தேர்தல் ஆணையரை கழக எம்.பி.க்கள் சந்தித்து வலியுறுத்தல்!

**புதுடெல்லி, ஜூலை. 18-**

**தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் நடைபெறும்போது, ஆதார், ரேஷன் அட்டை ஆகியவற்றை ஆவணமாகப் பெற வேண்டும் என, தலைமைத் தேர்தல் ஆணையரிடம் தி.மு.க. நேரில் வலியுறுத்தியுள்ளது.**

**இறந்தவர்கள் பெயரை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்க வேண்டும் - தேர்தல் தொடர்பான நடைமுறைகளை தமிழிலும் வழங்கவேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளையும் கழகம் வலியுறுத்தியுள்ளது.**

அதன் விவரம் வருமாறு:-

இந்தியத் தலைமை தேர்தல் ஆணையம் அனைத்து அரசியல் கட்சிகளுடனும், தனித்தனியாக சந்திப்பை நடத்தி வருகிறது. அதன்படி, தேர்தல் தொடர்பாகவும், அரசியல் கட்சிகள் சந்திக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும், தேர்தல் ஆணையம் அரசியல் கட்சிகளைச் சந்தித்து வருகிறது.

இந்நிலையில், தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்.ஆர். இளங்கோ, டி.எம்.செல்வகணபதி, தங்க தமிழ்ச் செல்வன், கே.ஆர்.என். ராஜேஷ் குமார், முரசொலி ஆகியோர் தேர்தல் ஆணையர்களை புதுடெல்லியில் நேற்று சந்தித்தனர்.

இதையடுத்து, செய்தியாளர்களிடம் பேசிய தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஆர்.இளங்கோ, "தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் நடைபெறும்போது, ஆதார், ரேஷன் அட்டை ஆகியவற்றை ஆவணமாகப் பெற வேண்டும் என, வலியுறுத்தினோம்" என்று தெரிவித்தார்.

மேலும், இறந்தவர்கள் பெயர்களை வாக்காளர் பட்டியலில் இருந்து விரைவாக நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் - தேர்தல் தொடர்பான அனைத்து விதிமுறைகளும் ஆங்கிலம், இந்தி போன்று தமிழிலும் வழங்க வேண்டும் என்றும் தி.மு.க. சார்பில் வலியுறுத்தியதாகவும் என்.ஆர். இளங்கோ எம்.பி. குறிப்பிட்டார்.

### கர்ப்பிணிப் பெண்களுக்கு வளைகாப்பு விழா!

# அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைகள் இலவசம்!

## பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

*திருவண்ணாமலை, ஜூலை. 18-*

*திருவண்ணாமலை காந்தி நகர் பைபாஸ் சாலை பகுதியில் செயல்படும் அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவக் கல்லூரி நகர்ப்புற மருத்துவமனையில், கர்ப்பிணி தாய்மார்களுக்கு வளைகாப்பு விழா நடைபெற்றது.*

*திருவண்ணாமலையில் தொண்டு செய்வோம், துணை நிற்போம் என்ற முழக்கத்தோடு கடந்த 7 ஆண்டுகளாக பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களை அமைப்பாளராகக் கொண்டு, தூய்மை அருணை திட்டம் செயல்பட்டு வருகிறது. தூய்மை அருணை திட்டத்திற்கு 4 மேற்பார்வையாளர்களும், 39 வார்டுக்கு 39 ஒருங்கிணைப்பாளர்களும், மாட வீதி தூய்மைப் பணிக்கு 7 ஒருங்கிணைப்பாளர்களும் ஒவ்வொரு வார்டுக்கும் 25 தூய்மைக் காவலர்கள் என ஆயிரக் கணக்கானோர் மரம் நடுதல், பராமரித்தல், கால்வாய் மற்றும் தூர்வாருதல் என செயல்பட்டு வருகின்றனர்.*

*16.07.2025 புதன்கிழமை காலை 10.00மணிக்கு, திருவண்ணாமலை, காந்தி நகர் பைபாஸ் சாலையில் உள்ள நகர்ப்புற அருணை மருத்துவமனை வளாகத்தில், தூய்மை அருணை அமைப்பு சார்பில், கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு விழா நடைபெற்றது.*

*விழாவிற்கு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி தலைமை வகித்தார்.*

*அருணை கல்விக்குழுமங்களின் துணைத் தலைவர் எ.வ.குமரன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, மாநகர மேயர்நிர்மலாவேல்மாறன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*தூய்மை அருணை மேற்பார்வையாளர் டாக்டர் எ.வ.வே.கம்பன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். முன்னதாக டாக்டர் உஷாகல்யாணி அவர்கள் கர்ப்பிணி பெண்களுக்கு மருத்துவ ஆலோசனைகளை வழங்கி பேசினார்.*

*விழாவில் கலந்து கொண்டு பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சரும், தூய்மை அருணை அமைப்பாளருமான எ.வ.வேலு அவர்கள், கர்ப்பிணி பெண்களுக்கு பட்டுச்சேலை, இனிப்புகள், தின்பண்டங்கள் மற்றும் மங்கலப்பொருட்களை வழங்கி வாழ்த்திப் பேசினார். அவர் ஆற்றிய உரையிலிருந்து...*

*தூய்மை அருணை சேவைகளின் தொடர்ச்சியாக, திருவண்ணாமலை நகரில் உள்ள கர்ப்பிணி தாய்மார்களுக்கு மாதந்தோறும் வளைகாப்பு விழாவை நடத்துவதென முடிவு செய்துள்ளோம். அதன்படி தூய்மை அருணை அமைப்பும், அருணை மருத்துவக் கல்லூரியும் இணைந்து வளைகாப்பு விழாவை நடத்துகிறோம்.*

*அருணை மருத்துவக் கல்லூரியில் இனிவரும் காலங்களில் பிரசவம் பார்ப்பதற்கும், பிரசவம் முடிந்து, பிறக்கும் குழந்தைக்கு சிக்ச்சை அளிக்கவும், மருத்துவ ஆலோசனை வழங்கவும், மருத்துவ பரிசோதனைக்கும் மருந்து, மாத்திரைகள், எக்ஸ்ரே, ஸ்கேன், இசிஜி, சிறுசிறு அறுவை சிகிச்சைகள் போன்றவற்றிற்கு கட்டணமின்றி மருத்துவ சேவை வழங்கப்படும்.*

*அதேபோல, சிகிச்சைக்காக அனுமதிப்படும் நாட்களில் படுக்கை வசதிக்கும், அங்கு வழங்கப்படும் உணவும் கட்டணமின்றி வழங்கப்படும். பொது மருத்துவம், ஆப்ரேஷன், மகப்பேறு, குழந்தை நலம், எலும்பு முறிவு சிகிச்சை, கண், காது, மூக்கு, தொண்டை சிகிச்சை, பல் மருத்துவம், தோல் நோய், சுவாசம், மனநலம் போன்ற அனைத்து சிகிச்சைகளும் கட்டணம் இல்லாமல் அருணைக் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் வழங்கப்படும்.*

*தூய்மை அருணை சார்பில் நடத்தப்படும் வளைகாப்பு விழாவில் பங்கேற்கும் தாய்மார்களுக்கு தாய்வீட்டு சீதனம் போல பரிசு பெட்டகம், அறுசுவை உணவு பெட்டகம் வழங்கப்படும்.*

*இவ்வாறு அவர் உரையாற்றினார்.*

*விழாவில் 39வார்டு ஒருங்கிணைப்பாளர்களும், மாட வீதி ஒருங்கிணைப்பாளர்களும், தூய்மைக் காவலர்களும் கலந்து கொண்டனர்.*

*நிறைவாக மருத்துவக் கல்லூரி முதல்வர் டி.குணசிங் நன்றி கூறினார்.*

*விழாவிற்கான ஏற்பாடுகளை மேற்பார்வையாளர்கள் இரா.ஸ்ரீதரன், சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி, ப.கார்த்திவேல்மாறன், பிரியா ப.விஜயரங்கன் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.*

சட்டபேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி கீழ்பென்னாத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, திருவண்ணாமலை வட்டம் அண்டம்பள்ளம் ஊராட்சியில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தினை தொடங்கி வைத்து பல்வேறு துறைகளின் சார்பாக பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த திட்டத்தின் மூலம் கிராம பகுதிகளில் 15 துறைகளின் சார்பில் 46 சேவைகள் வழங்கப்படுகிறது. இதில் அனைத்து துறை அரசு அதிகாரிகள் உட்பட பயனாளிகள் பலர் கலந்து கொண்டனர்.